வாக்குமூலம்

குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பல்லடம்

வழக்கு எண் : CC 1 of 2023

வழக்கு சாட்சி – PW 5

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.அகஸ்டின் | ஜாதி | : | |
| தந்தை பெயர் | : | செல்லதுரை | தொழில் | : | தனியார் கம்பெனியில் வேலை |
| கிராமம் | : | மூலப்பாளையம் | சமயம் | : | |
| தாலுக்கா | : | ஈரோடு | வயது | : | 42 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 03.11.2023.
(எதிரி ஆஜர்).

முதல் விசாரணை: நாள்: 03.11.2023.

1. நான் தற்போது மேற்கண்ட முகவரியில் குடியிருந்துக் கொண்டு தனியார் கம்பெனியில் வேலை செய்து வருகிறேன். கடந்த 18.09.2022 ஆம் தேதி எனது மாமா செல்வராஜ் அவர்களின் மகன் கிப்ஷன்ஞானதுரை என்பவருக்கு பெண் பார்க்கவேண்டி ஆசிர்கோவில்பிள்ளை என்பவருக்கு சொந்தமாக TN 39 BD 3607 என்ற ஆமினி காரில் நான், எனது அக்கா ராஜம்மாள், மாமா செல்வராஜ், மாமா மகன் கிப்சன்ஞானதுரை, ஆசிர்கோவில்பிள்ளை, அவரது மனைவி அமிர்தசெல்வி ஆகியோர்களுடன் பல்லடம் வந்து பல்லடத்திலிருந்து வடுகபாளையம் சென்று பெண் பார்த்துவிட்டு அங்கிருந்து திரும்பி வீட்டிற்கு செல்வதற்காக புறப்பட்டு திருப்பூர்–பொள்ளாச்சி ரோட்டில் பல்லடம் தாலுக்கா அலுவலகம் எதிரில் உள்ள National Driving School முன்பாக சுமார் மதியம் 2.40 மணியளிவல் ஆமினி காரை ஓரமாக நிறுத்திவிட்டு நாங்கள் 6 பேரும் பெண்பார்த்தது சம்மந்தமாக பேசிக்கொண்டு இருந்தோம். அப்போது வடக்கிலிருந்து தெற்கு நோக்கி வந்த TN 42 AH 7984 என்ற ஈச்சர் வேன் எங்களுக்கு எதிர் திசையில் அதிவேகமாக வந்து பல்சர் இருசக்கர வாகனத்தில் மோதி, அதை இழுத்துக்கொண்டு வந்து படிக்கட்டில் உட்கார்ந்து இருந்த ராஜம்மாள், அமிர்தசெல்வி ஆகியோர்கள் மீது மோதியதில் அதில் அக்கா ராஜம்மாளுக்கு தலையில் பலத்த காயம் ஏற்பட்டது. அமிர்தசெல்விக்கு இடது காரில் அடிபட்டு துண்டாகிவிட்டது.

செல்வராஜ்க்கு மார்பில் பலத்த காயம் பட்டு மார்வு எலும்பு உடைந்துவிட்டது.

2. பின்னர் அங்கிருந்த நான், எனது அக்கா மகன், ஆசிர்கோவில்பிள்ளை ஆகியோர்கள் ஆம்புலன்ஸ் பிடித்து அடிபட்டவர்களை பல்லடம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து வந்தோம். பல்லடம் அரசு மருத்துவமனைக்கு வந்தபோது அவர்களை பரிசோதித்த மருத்துவர்கள் அவர்கள் இருவரும் சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டதாக கூறினார்கள். எனது மாமா செல்வராஜை திருப்பூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்து செல்ல சொன்னார்கள். நாங்கள் கோவை KMCH மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். எனது அக்கா ராஜம்மாள், அமிர்தசெல்வி ஆகியோர்களின் பிரேதங்களை திருப்பூர் அரசு மருத்துவமனை பிரேத கிடங்கில் வைக்கப்பட்டது. விபத்து குறித்து காவல் துணை கண்காணிப்பாளர் பிரேதங்களை பார்வையிட்டு பிரேத விசாரணை மேற்கொண்டார். நாங்கள் அடையாளம் காண்பித்தோம். ஆஜர் எதிரி தான் விபத்தை ஏற்படுத்திய ஈச்சர் வேனை ஓட்டி வந்தவர் ஆவார். இது சம்மந்தமாக காவல் துணை கண்காணிப்பாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பு குறுக்குவிசாரணை</u>

எதிரி ஆஜர். எதிரி தரப்பு குறுக்கு விசாரணைக்கு போதிய வாய்ப்பு அளித்தும் குறுக்கு விசாரணை செய்ய முன்வராததால் குறுக்கு விசாரணை இல்லை என்று முடித்துவைக்கப்படுகிறது.

மறுவிசாரணை: இல்லை.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

K CHITHRA

Digitally signed by K CHITHRA
Date: 2023.11.03 09:09:18 +0530

நீதித்துறை நடுவர்,
பல்லடம்.